ஏ. நஸ்புள்ளாஹ்வின்

# சிறகுகள்

பறத்தல் 01.

ஆகஸ்ட் - செப்டம்பர்



சிறகுகள் பறப்பதற்காகவும் உணர்வதற்காகவும்

ஆசிரியர்

ஏ. நஸ்புள்ளாஹ்

ஆலோசனை

கலாபூசணம் ஏ.எம்.எம். அலி
ரா.ப. அரூஸ்
ஜே. பிரோஸ்கான்
ஏ.கே. முஜாரத்
நீறோ

அச்சமைப்பு

ஆரெப் முனிஸ்

ஏ. நஸ்புள்ளாஹ்வின் சிறகுகள்
றியாத் நகர்,
பைசல் நகர்,
கிண்ணியா 03.
இலங்கை

கைபேசி: 077 6751510
075 9814991

தருகை : 40

உறவுகளோடு....

இலக்கியங்கள் அதிகபட்சமாக பேசப்படும்
ஒரு காலசூழலில் படைப்பாளிகளின்
குரலாக சமூகம், இனம், மதம்
இன்னும் மனிதநேயம் என உறவு
கொண்டாட சிறகுகள் தயாராகிற்று.
சிறகுகளின் தொடர்ச்சியான
சாத்தியப்பாட்டுக்கு
படைப்பாளிகளும் வாசகர்களும்
தங்களின் மேலான உறவுகளை
தொடர்ந்து பயணிக்கவேண்டுமென்று
சிறகுகளின் எண்ண அலைகள் ..
சிறகுகளின் வருகையை அறிந்து
வாழ்த்து மாலைகள் சூடிய உறவுகளுக்கு
மேலதிக வாழ்த்துக்கள் சிறகுகள்
சொல்லி நிற்கிறது.
படைப்புகளை அனுப்புங்கள் அது
சமூகத்தின் குரலாக பேசட்டும்.

உறவுகளுடன்
ஆசிரியர்



## வாழ்க சிறகே!

### மூதூர் கலைமேகம் கவிதை

சமுதாய அவலம் போக்கி
சர்க்கரை இனிமை தேக்கி
அமுதான தமிழை தாங்கி
அறை கூவல் விடுக ஏடே!

கரமேந்தி வாசகர்தம்
கருத்திலே உறையும் சிறகே
உரம் சேர்த்து ஊரி வருக
எனக்கெந்தன் இதய வாழ்த்து!

சிரம் தாழ்த்தி எம் குறையை
சீர் செய்ய வாராய் சிறகே
விரைந்தென்றும் வளர்க தாயே
வெற்றியாய்முரசொலிப்பாய்.


மாதத்தை வாரமாக்கி
மலர்ந்திடு ஆண்டுதோரும்
பாதக நிலைமை மாற்றி
பல்லாண்டு பறப்பாய் சிறகே!

கிண்ணியா ஈன்ற முத்தே
கலை நாட்டுச் சிறகே
உன்னுலா கண்டு மகிழ
ஊருக்கு புகழ் குவிப்பாய்

சிறகுகள் முளைத்த சிட்டாய்
செகமெலாம் ஒலி முழங்கு
கரைபடிந்துழலு மாந்தர்
ஹல்புக்கு ஒலி வழங்கு!

வாழ்கே நற்சிறக இதழே
வளர்க எம் அழகு மதியே
நீழ்க நின் சேவையாண்டு
நிலைத்திடு வாழ்க சிறகே!

# பச்சை மரம்



முதிர் கன்னி
முடிந்து வைத்த
ஆசைகள்
அவிழும் முன்
முடியப்போகிறது
இவள் வாழ்க்கை...

புகழ் பெற்ற
புற்றுநோய்
முற்றுகையிட்டது
இவள்ப் பூவுடலில் வெற்றிக்களிப்போடு...

விதியினை
நோவாதா ..?
படைத்தவன் பரீட்சையென
சொல்வதா....?

பாவையவள் பலதும் எண்ணியே
பரிதவித்தாள் பரிதாபமாக


நோயது செய்யும்
வேதனை தாங்கும்
அவள் உள்ளம்
சுற்றம் தரும் வதையில் புழுவாய்
துடிக்கிறது....

தாயென ஒருத்தி தரணியில் வாழ்ந்திருப்பின்
தனித்திருக்கமாட்டேன்
எனத்தவிக்கிறாள் தனியாக....

உற்றவர்கள் உறவினர்கள்
வெட்டிப்பேசும் சுட்டுப்பேச்சில்
பட்டுப்போனதே பச்சைமரம்

ரணமான புண்களுக்கு ஆறுதல் மருந்தை
ஆதங்கத்தோடு தேடுகிறாள்
இறைவனடியில் இறுதியாக....

**ஆஷிகா**
**கொழும்பு 12.**



## வெற்றுடலாய்

**தாரிக் கவிதை**

நீ எந்த ஆடையிலும் வரலாம்
முலங்காலின் கீழாகவோ அல்லது அதற்கு மேலாகவோ
நீ உடுத்தியிருக்கலாம்
எந்த வேலையிலும்
உன் மறை பகுதிகள் தெரியும் படியான ஆடையிலும்
என் முன்னால் செல்லலாம்
அவ்வாறு அல்லாது விடின் வெற்றுடலாய் நடமாடி
பின் நவீனத்துவம் என்ற கருத்தாடலுக்குள்
அதனை செருகிவிடலாம்
நீ எந்த வடிவமைப்போடு
என் முன்னே நகர்ந்தாலும்
அவை எந்தப்பாதிப்பையும் எனக்குள் நிகழ்த்திடாது
ஏனெனில், அதிகூடிய அலங்காரங்களோடு வாழ்ந்து
பலர் கண்களிலும் மனதுகளிலும்
மேனியின் வசீகரங்களை பதிவுசெய்து தற்சமயம் மூச்சின்றி பிரேத அறையில்
கிடக்கும் ஓர் உடலை
ஐந்து ரூபா பிளேட் ஒன்று வெட்டிக்கிழிப்பதை நான் பார்த்தேன்.
அன்றிலிருந்து மாடுகள்போன்ற விலங்குகளின் உடல் மிகவும் பெருமதி
வாய்ந்தது என்ற முடிவு
எனக்குள் மாற்றமில்லாமல் இருக்கிறது

## இருலோக வெற்றியும் கிடைத்திடும்.

**பி.ரீ. அஸீஸ், கிண்ணியா 07.**

அல்லாஹ் உன்னை எண்ணுகிறேன் - என்
உள்ளத்தில் தினமும் தேடுகிறேன்!
எங்கும் உன்னை பார்க்கிறேன் - உனை
நெருங்கவே நானும் நாடுகிறேன்.

புனிதமும் உயர்வும் உடையவனே - பெரும்
புகழும் பெருமையும் கொண்டவனே!
மனிதனைப்படைத்து வணங்கிடவே - உன்
மகிழ்வினில் அவனும் திளைத்திடவே!

அரிசினில் இருந்து ஆளுகின்றாய் - அகிலம்
அணைத்தையும் நீயே இயக்குகின்றாய்!
குர்சியும் உனக்கே சொந்தம் - பெரும்
குதரத்து நிறைந்த அல்லாஹ்வே!

அன்பும் அருளும் நிறைந்தவனே - நல்
அறிவை எமக்குத்தருபவனே!
இருலோக வெற்றியும் உன்னாலே - இந்த
இகத்தினில் கிடைத்திடும் முன்னாலே!

## இன்மை

**வைகறைச்சிற்பி கவிதை**



நிசப்தமாக இருக்கும்
இரண்டு எரிமலைகளுக்கிடையில்
ஓடிக்கொண்டிருக்கிறது
எப்பொழுதும் ஒரு
நதி.
அடர்வைப்பகுதியில் எப்பொழுதும்
கேட்டுக்கொண்டிருக்கிறது
ஒரு காட்டாற்றின் பாய்ச்சல்
இரண்டு பாறைகளுக்கிடையில்
எப்படியாவது முளைத்துவிடுகிறது
ஒரு மரம்.
இரண்டு பறவைகள் எப்படியாவது
நிழல் வெளியில் சிநேகிதமாகிவிடுகிறது
காலத்தில்
இரண்டு பொழுதுகளில்
இன்மையுறுகிறது எப்பொழுதேனும்
அவை

## புத்தி

### மூதூர் கலைமேகம் கவிதை

அன்று நான் அகதி
இன்று நான் விடுதி
என்றுமே அவதி
இது என்ன நியதி!

வாழ்க்கையே சகதி
வருத்தமோ மிகுதி
ஊழ்வினை ஏந்தி
அலைகிறேன் வீதி!

என்னமோ விரக்தி
ஏராள மரதி
வீண் விசை முத்தி
வேகுகிறேன் வருந்தி!

நெஞ்சிலே உறுதி
நேர்மையில் நீதி
அஞ்சாது சாந்தி
அடைவேனோ இறுதி!

இறை மீது பக்தி
இருந்திட்டால் சித்தி
மறைவேத மோதி
மாண்டால் புத்தி!

## புகழேந்தியின் இரண்டு கவிதைகள்

### மரமானவன்

நின்றிருக்கிறேன் நானும்
அவ்விடத்தில்
மரமில்லாதொரு பொழுதில்
என்றாலும்
என்மீதில் அமர்ந்ததில்லை ஒரு நாளும்
எந்தப் பறவையும்



### அழுக்குக் கடவுள்

முற்றிலும் அழுக்குகளால்
மூடப்பட்டவன் நீ
என்றார்கள்
உங்களுக்கான
மற்றுமொரு கடவுளை
தயார் செய்ய என்றேன்

## நினைவுகளை சுமப்பதால்

என் இதயமும் ஒரு கழுதைதான்
என்றும் இறக்கமுடியாத சுமையென்று தெரிந்தும்
உன் நினைவுகளை சுமப்பதால்

பெ. விடிவெள்ளி, புதிய சேன புர,
புணர்வழ்வு நிலையம்

## செஞ்சில் நெருப்பைக் கொட்டியவளுக்கு .

ஆரெப் முனிஸ்

சுடுகிறது என்று தெரிந்தும் தீண்டிவிட்டது
என் விரல்கள்
மட்டுமல்ல...

நிலவின் பால்கொண்டு செய்த
தோல் கண்டு
நெருங்கிய பிறகுதான் புரிந்தது
அது கள்ளிப்பாலின் களஞ்சியமென்று.

என் வாலிபம்
அவள் எண்ணத்திலே
வற்றிப்போனது

ஒன்றாக சாப்பிட்டோம்
தனியாக கை கழுவினாய்
என்னையும் சேர்த்து

உன் வார்த்தைகணைகள்
என் இதயத்தை கிழித்து
கிழிஞ்சல்களாக்கியபோதும்
காயங்கள் வழியாக ரத்தம் வரவில்லை
கண்ணிர்துளிகளே கசிந்து கொண்டிருந்தது.

இப்போது என் அதிகாலைகூட
அனல் வெயிலாகத்தான் விடிகிறது
என் கல் நெஞ்சை
பஞ்சாக்கியதும் நீதான்
அதில் தீ பந்தம் கொழுத்தியதும் நீதான்.

ஏ! கொலைகாரியே
ஒரு அப்பாவி அழகனின்
மனதை கொலைசெய்து விட்டு
எப்படி சிரிக்கமுடிகிறது
இன்னொருத்தனுடன்

யாரோடும் நீ வாழலாம்
உன்னோடு நான் வாழ்கிறேன்....
இதுபோதுமெனக்கு.



## இழந்து வீட்டவை

சந்தோசங்களால்
வரைவிலக்கணப்படுத்தப்பட்டு
எல்லையில்லாவாழ்வுக்குள்
பிடிக்கப்பட்டுப்போயிருந்தோம்
நானும் என் குடும்பமும்.

காலங்களின் நீளுகையை
தொடர்ந்து தேடலின்
விளைவாய் என் தங்கைக்கும்
தேடிப்பிடித்தோம்
ஒரு மணமகனை

திருமணம் முடிந்த
முதலாவது வருடத்தின்
நிலா செத்த இரவொன்றில்
மச்சினன் மண்டியிட்டுக்
கேட்டான் நாம்
வாழ்ந்த வீட்டை

விளைவு
விடியற்காலைப்பொழுதில்
அணைவரும் நடுவிதிக்கு
வந்துவிட்டோம்

தீங்கின் விலங்கில்
சிக்கித்தவிக்கும்
என்சகோதரியை
மட்டும் தொலைத்தபடி..!

---

**நஸார் இஜாஸ்**



## காலம்

வெலிப்பன்னை அத்தாஸ் கவிதை

கணந்தோரும் காலம் விரயமாகிவிட்டது
காலத்தோடு நாம் பயணிக்கின்றோமா..?
நேரம் ஆக ஆக வலைமீனும்
பழுதடையுது
உடன் கறிக்குச்சமைத்திடல்
அத்தியாவசியம்
உபதேசம் இ∴து காலத்தோடு விரைந்து
செயல்படத்தான்
காலத்தை நகரவிட்டு நாம் கோட்டை
விடுவதா?
ஆயின் நம்மையறியாது முதிர்வும்
தட்டிவிடும்
முன்னேற்றம் வேண்டும் எனில்
வேகமாய் எழுந்திடுவீர்
கறந்தபால் மீண்டும் முளைபுகுவதில்லை
சிந்தித்து தெளிவு பெருவீர்
பருவத்தே பயிர் செய்வீர்!

## நன்றியற்ற காக்கைகள்

**ஏ.கே. முஜாரத் கவிதை**

ஆதரவற்ற இருகாக்கைகள் தற்காலிக
இருத்தல்வேண்டி என் வீட்டு வாசலின்
தென்னை மரக்கிளையில் நின்றவாறு
அடம்பிடிக்க
எனதான மனசின் நெடுக காக்கைகள் மீதான
பரிதாப ஈரலிப்புக்கசிந்தலாயிற்று
பின்னான பொழுதில் எனதான
தென்னை மரத்திலான பார்வை நீள்கையில்
காட்சியான இரு காக்கைகள்
சில காக்கைகளாகவும் சில காக்கைகள் பல காக்கைகளாகவும்
என் தென்னை மரத்திலான அத்து மீறலான இருத்தலைக்கண்டு
சந்தோசம் செய்தாலும் காக்கைகள் நன்றியுடைத்து
இருத்தலை உருத்தாக்கிய
பொழுதோடு என்னையும்
என் வீட்டுக்கோழிக்குஞ்சுகளையும் , எதிரிகளாகவே பார்க்கின்றன.

---

## மனிதன்

**கிண்ணியா எம்.ரீ. சஜாத்**

பெற்றார் சொல்லை மதிக்க வேண்டும் - அதைப்
பேணி கடமையை முடிக்க வேண்டும்
உற்றார் உறவுடன் பழக வேண்டும் - வாழ்வில்
உண்மைகள் பேசி மகிழ வேண்டும்


நல்லதை கற்று நடக்க வேண்டும் - பெரும்
நாச குணங்கள் ஒழிய வேண்டும்.
சொல்லால் இன்பம் பெருகவேண்டும் - நம்
சொந்தம் உறவாடிக்குளிர வேண்டும்.

வஞ்சனை நெஞ்சில் விலக வேண்டும் - நல்
வாஞ்சை யுடன் சொல் மிளிர வேண்டும்!
பஞ்சனை பால் பழம் கிடைக்கவேண்டும் - ஏழை
பஞ்சையர் தமக்கு அளிக்கவேண்டும்.

புத்திக்கூர்மை பெற்றிட வேண்டும் - நற்
புதுமைகள் படைத்திடும் ஆவல் வேண்டும் !
பக்தியோடிறையை பணிய வேண்டும்!
பண்புள்ள மனிதனாய்க் கனிய வேண்டும்!

## ஜே.பிரோஸ்கானின் இரண்டு கவிதைகள்

### ஆறுதல்



என் வீட்டுக்கு முன்பான குட்டையில்
இறால் பிடிப்பதற்கான முயற்சியில்
விடியற்பொழுதிலிருந்து வலை வீசியும்
மாட்டிக்கொள்ளாத இறால்கள் தப்பிப்பதில்
எனக்குகோபம்தான்
இருப்பினும் இறாலுக்கு விரித்த வலையில்
சின்னச்சின்ன பணையான் மீன்கள் மாட்டி இறப்பதில்
எனக்கு உடன்பாடில்லையென்ற என் நண்பனின்
வருத்தப்படுதலுக்கு செவிசாய்த்து மனசுக்குள் சோகித்தாலும்
வாடகை வலைக்கு கூலி கொடுப்பதற்கான சிந்தனையில்
மீண்டும் வலையை வீசுகிறேன்.
அங்காங்கே சிக்கிய இறால்களை கண்டு சிரிப்பதற்கொன்றுமில்லை
சிக்கிய இறால்களை எடுத்துக்கொண்டு மீதமான சின்ன மீன்களை
குட்டைக்குள் விடும்போதும் ஆறுதலாகி விடுகிறதுதான் மனது.

### கோழியும் காகங்களும்...
### பூனையும் நாய்களும்...

ராத்திரி உண்டு மீதமான எச்ச சோற்றை என் தங்கச்சி கோழிகெளுக்கென்று
வீசுகையில் அவசரஅவசரமாக ஓடிய கோழிகளை கண்ட காகங்கள்
ஆராவாரத்துடன் கூட்டமாய் கூடியதில் பயந்து ஒதுங்கின கோழிகள்.
வீரனான சந்தோசத்துடன் காகங்கள் நெருங்குகையில் சில பூனைகள்
எரிச்சல்கொள்ள காகங்கள் களைந்தன ஏமாற்றத்துடன்.
பூனைகள் சுதந்திரத்துடன் உண்ண ஆரம்பிக்கையில் நாளா பக்கமுள்ள
நாய்கள் சில ஒன்று சேர்ந்து பூனைகளை விரட்டியடிப்பதற்கான சண்டையின்
பேரொலியில் நேற்றுக்கு முன்னநாள் என் மூத்த சகோதரிக்கு கிடைத்த
குழந்தை பயந்து அழுததாக சகோதரி நச்சரிக்க தங்கச்சி உருத்தலானாள்.
இத்தனைக்கும் இந்த மீதமான சோறுதானே என்று
கோபத்தை சோற்றை அகற்றுவதில் காட்டினாள்.



# வல்லரசுடன் சில வார்த்தைகள்

மருதூர் ஜமால்தீன்

வல்லூறுகள்
வல்லரசுக்கிரீடத்தை
அகம்பாவாத்தலையில்
சூடிக்கொண்டே
இரத்தப் பிசுபிசுப்பில்
இதயப்பிரசவம்
நிகழ்த்துகின்றார்கள்

பறித்தெடுக்கமுனையும்
எண்ணெய்ப்புதையலுக்காய்
கலிமா மைந்தர்கள்
காவுகொள்ளப்படும்
துன்பியல் நிகழ்வுகளை
தொடக்கிவைக்கும்
அடாவடி அமெரிக்காவின்
அகோரமுகத்தின்
இக்கால கூட்டம்
ஈமானியக்கரங்களின்
எழுச்சியறுவடைக்கான
முன்னறிவிப்புக்கள்

சூடு சுரணையற்ற
சூழ்ச்சி நாடுகள்
பிணந்திணிக்கூட்டாளிகளை
போர்ப்பாசறைக்குள்
உதவி முலாம் பூசி
ஏகத்துவ மைந்தர்களின்
உள்ளத்தையும்
சிதைத்தே
ஊடுறுத்துகின்றன்.

நிலை நிறுத்தப்படும்
எமது தீன் பயிர்களின்
வித்துக்களுக்கு
ஈமானியப்பயிரிடுங்கள்
அந்த யஹூதிகளை
ஆத்திரங்களால்
அஸ்தமிக்கச்செய்யட்டும்.



## நட்பு

கிண்ணியா எம். எம். அலி அக்பர்

சுகதுக்க வேளையிலும்
தோள் கொடுப்பதே
உண்மையான நட்பு
இந் நட்புக்கு பாசமானது
வேர்விட்டிருக்கும் சுய நலமெல்லாம்
பிரியாவிடை பெற்றுவிடும்

பாலுக்குள் வெண்மை
எப்படி நனைந்திருக்கோ
நட்புக்குள் நாணயம்
வெகுவாய் நனைந்திருக்கும்

உண்மையை மட்டும்
ஆடையாய் அணிந்த
உன்னதமான நட்பு
நீடூழியே வாழும்
போலியாய்க்கொள்ளும் நட்போ
நொடிப்பொழுதில் மாழும்
உண்மை நட்புக்கு எதுவும்
ஈடாக மாட்டாது.

---

## அவள்


அழித்திடா ஓவியமாய்
உயிரிலே உறைந்தவள்
இடித்திடா இமயமாய்
இதயத்தில் நிமிர்ந்தவள்

இன்பங்களின்
உயர்ந்த சிகரமானவள்
இதயங்களில்
நிரந்தர உதயமானவள்

வலிகளுக்கெல்லாம்
அருமருந்தானவள்
விழிகளுக்கெல்லாம்
நிஜவுருவானவள்

இதய உயிரோட்டத்தின்
அத்திவாரமானவள்
உணர்வின் நினைவோட்டத்தில்
என்றும் நிரந்தரமானவள்

உயிர் தந்த தாயவள்...



பெ. விடிவெள்ளி,
புதிய சேன புர
புனர்வாழ்வு நிலையம்.

## புது வெளி

நவீன கவிதைகள் எழுதிவரும் ஏ. தாரிக்கின் "மகா ராணி" முதல் கவிதைகளுக்கான தொகுதி மிக விரைவில் வாசகர்களை சந்திக்க இருக்கிறது.

⊖⊖⊖

ஏ. நஸ்புள்ளாஹ்வின் "கனவுகளுக்கு மரணம் உண்டு" எனும் கவிதைத்தொகுதி "காயங்களின் வாக்கு மூலம்" எனும் சிறுகதைத்தொகுதி என இரு தொகுதிகள் விரைவில் இறங்கி வர தயாராகிக்கொண்டிருக்கிறது.

⊖⊖⊖

பி.ரீ. அஸீஸ் அவர்களின் "சிறுவர் பாடல்" மற்றும் கவிதைத்தொகுப்பும் வெளிவர இருக்கிறது.

படைப்பாளிக்கு "சிறகுகள்" வாழ்த்துக்களை சொல்லி நிற்கிறது.

⊖⊖⊖


## படைப்பாளிகளுக்கு...

**படைப்பாளிகள் படைப்புக்கள், விமர்சனங்கள், கடிதங்கள் அனுப்பும் போது வார்த்தைகளாக நீட்டாமல் கனதிமிக்க படைப்புக்களை சிறகுகள் கோரி நிற்கின்றது.**

ஏ. நஸ்புள்ளாஹ்வின் சிறகுகள்
றியாத் நகர்,
பைசல் நகர்,
கிண்ணியா 03.
இலங்கை

கைபேசி: 077 6751510
075 9814991

# நியூ எரைவல்ஸ்...




தர்மினி பத்மநாதன் படைப்பாற்றலையும், ஆளுமைத்திறனையும் சமூகப்பார்வையையும், சுய விமர்சனத்தையும் ஒருங்கே கலந்து, ஒரே தளத்தில் நமக்கு புதிய பார்வை புலம் பெயர் தமிழர்பால் செலுத்த உதவும் சிறுகதைத்தொகுதி "எங்கட கதைதான்"

தொடர்புகளுக்கு : akkini77@gmail.com



ஒரு தென்னைமரம் சிறுகதைத்தொகுதி ஏ.எம்.எம்.அலி அவர்களின் படைப்பாளுமையை வெளிப்படுத்துகிறது. அனுபவங்களுக்கு அப்பாலாக விரிந்து கிடக்கும் மனித நேய படைப்பாளி அலி அவர்களை இனி கொண்டாடுவோம்.

தொடர்புகளுக்கு : அடப்பனார் வயல், கிண்ணியா 05.




This Magazine is published by "Siraguhal" Publication, Kinniya.